**செய்தி வெளியீடு எண்:148** **நாள் : 09.04.2015**

**செய்தி வெளியீடு**

**<u>மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் அயனாவரம் பகுதியில் உள்ள திருவல்லிக்கேணி கூட்டுறவு நகரச் சங்கத்தின் கேஸ் குடோன் மற்றும் நியாயவிலைக் கடைகளில் திடீர் ஆய்வு</u>**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, **மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு** அவர்கள் இன்று (9.4.2015) சென்னை, அயனாவரம் பகுதியில் உள்ள திருவல்லிக்கேணி கூட்டுறவு நகரச் சங்கத்தின் சமையல் எரிவாயு கிட்டங்கியில் (Gas Godown) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அயனாவரம் பகுதியில் உள்ள திருவல்லிக்கேணி கூட்டுறவு நகரச் சங்கத்தின் சமையல் எரிவாயு கிட்டங்கியின் வாயிலாக 3600 சமையல் எரிவாயு இணைப்புதாரர்களுக்கு சமையல் எரிவாயு மற்றும் வர்த்தக முறையிலான சமையல் எரிவாயு சிலிண்டர்களும் விநியோகிகப்பட்டு வருகிறது.

ஆய்வின்போது கிட்டங்கியில் இருப்பில் உள்ள சிலிண்டர்களின் எண்ணிக்கை மற்றும் இருப்பு பதிவேட்டினை சரிபார்த்தார். கிட்டங்கியில் இருந்து தினமும் விநியோகிக்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விவரப் பதிவேடு, ரொக்க பதிவேடு, வாடிக்கைத்தாரர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்புகை இரசீதுகள் ஆகியவற்றை பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதில், 19 கிலோ எடையுள்ள 5 வர்த்தக சமையல் எரிவாயு விற்பனைத் தொகை இருசால் செய்யப்படாதது கண்டறியப்பட்டது. அதன் அடிப்படையில் **கிட்டங்கியின் கணக்காளர் திரு.கௌதம்** என்பவர் மீது நடவடிக்கை மேற்கொண்டு **தற்காலிக பணிநீக்கம்** (Suspend) செய்து உத்தரவிட்டார். மேலும், கிட்டங்கியில் உள்ள அனைத்து பதிவேடுகளையும் தணிக்கை செய்து அறிக்கையினை சமர்ப்பிக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அயனாவரம் பகுதியில் உள்ள சிந்தாமணி கூட்டுறவு நியாயவிலைக் கடை, பில்கிங்டன் ரோடு கிளையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்து ஆய்வு செய்தார். இந்த நியாயவிலைக் கடை மூலம் 1815 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதில் 600 குடும்ப அட்டைதாரர்களுக்கு மாண்புமிகு அம்மாவின் சிறப்பு திட்டமான நகரும் நியாயவிலைக் கடை வாயிலாக அத்தியாவசியப் பொருள்கள் அவர்கள் இருப்பிடத்திற்கே சென்று வழங்கப்பட்டு வருகிறது.

நியாயவிலைக் கடையில் பொருள்கள் வாங்குவதற்காக வந்திருந்த குடும்ப அட்டைதாரர்களிடம் பொருள்கள் முறையாக விநியோகிக்கப்படுகிறதா, தரமானதாக உள்ளதா என்பதை கேட்டறிந்தார். பொதுமக்கள் அத்தியாவசியப் பொருள்கள் முறையாக விநியோகிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தனர். மேலும், தரமான பொருள்கள் முறையாக விநியோகிக்கப்பட்டு வரும் மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக்கு பாராட்டு தெரிவித்தனர்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொருள்களின் இருப்பு குறித்து பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்த்தார். கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் விலையில்லா அரிசி, மற்றும் பருப்பு, எண்ணை போன்ற சிறப்பு பொதுவிநியோகத்திட்ட பொருட்கள் அனைத்தும் தரமானதாகவும், தங்குதடையின்றியும், சரியான அளவிலும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும், மேலும், அனைத்து நியாயவிலைக் கடைகளும் சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டுமெனவும், குறித்த நேரத்தில் திறக்கப்பட வேண்டும் என்றும், அனைத்து வேலை நாட்களிலும், அனைத்து பொருட்களையும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யவேண்டும் என்றும் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். நியாயவிலைக் கடைகளில்

விற்பனை செய்யப்படும் கட்டுப்பாடற்ற பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக் கூடாது என்றும், அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதை களப்பணியாளர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இவ்வாய்வின்போது திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் திரு.பி.பாலமுருகன் உடனிருந்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**